## சுருக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போன்று சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கும் மருத்துவப்படி மாதம் 100 ரூபாய் வழங்க அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2)துறை

அரசு ஆணை (நிலை) எண். 176

நாள் 31–12–2009
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 16 ம் நாள்

படிக்கப்பட்டது :

1 அரசு ஆணை (நிலை) எண்.236/நிதி (ஊ.பி) துறை நாள் : 01.06.2009.
2 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.11.09 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.

———

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மருத்துவப்படி 50 ரூபாய் என்பதை 100 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் சத்துணவு, குழந்தைகள் மைய பணியாளர்கள் 21–11–09 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்;

> “சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போன்று, மருத்துவப்படி மாதம் 100 ரூபாய் வழங்கப்படும்”

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி அரசு அலுவலர்களுக்கு மருத்துவப்படி வழங்கப்படுவது போன்று சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கும் மருத்துவப்படி மாதம் 100 ரூபாய் (ரூபாய் நூறு மட்டும்) வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. இத்திட்டம், இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

5. மேற்காணும் செலவினம் சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கு சம்பளம் பெற்று வழங்கப்படும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அதன் அ.சா.கு.எண்.32 JS(MP)/Pen/09 நாள் 31–12–09ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.இராமமோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை,சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர்,
சென்னை–2.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்,சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7பிரிவு)துறை, சென்னை–9.
நிதி (ஓய்வூதியம் / படிகள்) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.